இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 342 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 07 – வியாழக்கிழமை 23 ஜூலை 2026 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 342 : Thiruvalluvar Year - 2057 - Aadi 07 - Thursday 23 July 2026 - Madurai 12 Pages ₹ 5.00

## டெல்லி மாணவர்கள் போராட்டம் நாட்டின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்துள்ளது!

# ‘நீட்’ ஒழிப்பே நிரந்தரத் தீர்வு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணித்தரம்!

**சென்னை, ஜூலை 23 -**

**‘நீட்’ தேர்வு முறைக்கு எதிராக புதுடெல்லியில் மாணவர்கள் போராட்டம் நாட்டின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்துள்ளது என்றும், ‘நீட்’ ஒழிப்பே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வாக அமையும் என்றும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.**

கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (சி.ஜே.பி.) சார்பில் மாணவர்கள் நேற்றும், நேற்று முன்தினமும் நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடத்தப்பட்டு பின் தடுத்து நிறுத்தப்பட்டது. அன்றைய தினம் இரவு சி.ஜே.பி. ஆதரவாளர்கள் மீண்டும் ஜந்தர் மந்தரில் குவிந்தனர். நள்ளிரவு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. போராட்டக்காரர்கள் மீது காவல்துறையினர் கடுமையாக பிரம்படி நடத்தினர். கண்ணீர் புகை, குண்டுகளை வீசினர்.



பேரணியின்போது காயமடைந்த போராட்டக்காரர்கள் டெல்லி ஆர்.எம்.எல். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இதனிடையே சி.ஜே.பி. தலைவர் அபிஜித் திப்கே டெல்லி ஜந்தர் மந்தரில் நேற்று முன்தினம் மீண்டும் உண்ணாவிரதத்தை தொடங்கினார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது: -

ஜந்தர் மந்தரில் எங்களது போராட்டம் தொடர்கிறது. ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும். ‘நீட்’ தேர்வு காரணமாக தற்கொலை செய்த மாணவ, மாணவியரின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 கோடி இழப்பீடு வழங்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து போராடுவோம்.

ஒன்றிய அரசு எங்களோடு பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால் ஜந்தர் மந்தருக்கு வரலாம். நாங்கள் நீண்ட போராட்டத்துக்கு தயாராக உள்ளோம். எங்கள் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராடுவோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பேரணியில் பங்கேற்ற போராட்டக்காரர்கள், மந்திர் மார்க் போலீஸ் நிலையத்தில் உள்ளனர்.

இது தொடர்பாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘நீட்’ ஒழிப்பே எல்லா பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அது வருமாறு:-


**தலைநகர் டெல்லியில் மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் நாட்டின் ஒட்டுமொத்தக் கவனத்தையும் ஈர்த்துள்ளது.**

**NEET எனும் தேர்வு முழுக்க முழுக்க முறைகேடுகளுக்காக design செய்யப்பட்டது என முதன் முதலில் எச்சரித்தது நாம்தான். அதனால்தான், இந்தத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்தே நீட்டின் தீமைகளை எடுத்துச் சொல்லித் தி.மு.க. எதிர்த்து வருகிறது.**

**இந்தியாவுக்கே முன்னோடியாகச் சமூகநீதியைப் பாதுகாக்கப் போராடி, First Constitutional Amendmentக்கு வழிகோலிய தமிழ்நாட்டின் கோரிக்கையும் ‘நீட்’ ஒழிப்பு என்பதே.**

**மற்ற எந்தக் கோரிக்கைகளை விடவும் AbolitionOfNEET என்பதே இந்தப் போராட்டங்களின் மையப்புள்ளியாக இருக்க வேண்டும். NEET ஒழிப்பே அனைத்துப் பிரச்சினைகளுக்குமான நிரந்தரத் தீர்வாக அமையும். BanNEET SaveStudents.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




## ‘நீட்’ விவகாரம்: ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகும் வரை போராட்டம் தொடரும் என அறிவிப்பு!

# டெல்லியில் உச்சகட்ட பதற்றம்!

புதுடெல்லி, ஜூலை 23 -

‘நீட்’ முறைகேடு விவகாரத்தில் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகும் வரை டெல்லியில் போராட்டம் தொடரும் என்று கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் திட்ட வட்டமாகக் கூறியுள்ளனர். டெல்லி ஜந்தர் மந்தரில், சாரை சாரையாக இளைஞர்கள் குவிந்து வருவதால் தலைநகரில் உச்சக்கட்ட பதற்றம் நிலவுகிறது.

‘நீட்’ உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளில் நடைபெற்ற வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் கடந்த ஜூன் 21, தேதி டெல்லி ஜந்தர் மந்தரில் தொடர் போராட்டத்தை தொடங்கினர். ஜூன் 28ம் தேதி மாணவர்களுடன் இணைந்து சோனம் வாங்சுக் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.

இந்த போராட்டத்தின் அடுத்த கட்டமாக கடந்த திங்கட்கிழமை, ஜந்தர் மந்தரில் இருந்து பேரணியாகச் சென்று நாடாளுமன்றத்தை முற்றுகையிட முயன்ற மாணவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி, தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளையும் வீசியும் போராட்டக்காரர்களை கலைத்தனர்.

### இளைஞர்கள் சாரை சாரையாகக் குவிகின்றனர்!



இதனைத் தொடர்ந்து, ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொட்டும் மழையையும் கருத்தில் கொள்ளாமல் விடிய விடிய இரவு முழுவதும் ஜந்தர் மந்தர் பகுதியின் உள்ளே சாலையில் அமர்ந்து தொடர்ந்து போராட்டத்தை தொடர்கின்றனர்.

‘நீட்’ தேர்வுக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக பல்வேறு இடங்களில் இருந்து டெல்லி ஜந்தர் மந்தரில், சாரை சாரையாக இளைஞர்கள் குவிந்துள்ளனர். ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் முழக்கங்களை எழுப்பி வருகின்றனர்.

நாடாளுமன்றம் செல்லும் பாதைகள் அனைத்தும் இரண்டு அடுக்கு இரும்பு தடுப்பு வேலிகள் கொண்டு மூடப்பட்டுள்ளது.

மேலும் போராட்டக்காரர்களை கட்டுப்படுத்தும் விதமாக ஆயிரத்திற்கும் அதிகமான போலீசார் மற்றும் துணை ராணுவப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, டெல்லியில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி போராட்டத்தின்போது, சமூக ஆர்வலரும், நடிகருமான பிரகாஷ் ராஜ் மாணவர்களுடன் பங்கேற்று ஆதரவு தெரிவித்தார். மாணவர்களுடன் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்ட பிரகாஷ்ராஜ் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது, எப்போதும் உங்களுடன் பக்கபலமாக நிற்பேன் என பிரகாஷ்ராஜ் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நிலையில், டெல்லியில் மாணவர்கள், இளைஞர்கள் போராட்டம் தீவிரமடைந்துள்ள நிலையில், கூடுதல் படைகளை ஒன்றிய அரசு குவித்து வருகிறது. மேற்குவங்கத்தில் இருந்து மேலும் 20 சி.ஆர்.பி.எஃப். படைகளை டெல்லிக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் தலைநகர் டெல்லியில் உச்சகட்ட பதற்றம் நிலவுகிறது. மெட்ரோ ரயில் நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

## மருத்துவமனையில் மாணவர்களை சந்திக்க

# தி.மு.க. எம்.பி.க்களுக்கு அனுமதி மறுப்பு!

### ஒன்றிய அரசுக்கு ஆ.ராசா எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, ஜூலை 23 -

டெல்லியில் போலீசார் தாக்குதலில் காயமடைந்த மாணவர்களை மருத்துவமனையில் சந்திக்க ஒன்றிய அரசு அனுமதி மறுப்பதாக தி.மு.க. எம்.பி.க்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

‘நீட்’ தேர்வு வினாத்தாள் கசிவு, முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக கோரி



நேற்று முன்தினம் டெல்லியில் போராடிய மாணவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தியதில், பலர் காயமடைந்தனர்.

டெல்லி ராம்மனோகர் லோகியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாணவர்களை தி.மு.க. எம்.பி.க்கள் ஆ.ராசா, தயாநிதி மாறன், ஜெகத்ரட்சகன், கிரிராஜன், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் சந்திக்க சென்றனர்.

ஒன்றிய அரசின் நிர்பந்தத்தால் மாணவர்களை சந்திக்க காவல்துறை அனுமதிக்கவில்லை.

இதையடுத்து, மாணவர்களின் உறவினர்களிடம் நலம் விசாரித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. கொறடா ஆ.ராசா,

தி.மு.க. தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் மாணவர்களின் நலன் குறித்து விசாரிக்க சென்றோம், ஆனால், தங்களை அனுமதிக்கவில்லை என்றார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை பார்க்க கூட அனுமதிக்காத ஒன்றிய அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.